

# பரலோக பொக்கிஷங்கள்

*உங்கள் பொக்கிஷம் எங்கே?... அங்கே உங்கள் இருதயம்!*

## நெருங்கிவந்து 'கர்த்தரை ஆசீர்வதித்திடும்' பாக்கியம்!

"கர்த்தரைத் துதியுங்கள்!" என்ற வாக்கியமானது ஆங்கிலத்தில் இரண்டு வித்தியாசமான அர்த்தத்தில் கூறப்பட்டுள்ளது. ஒன்று Praise the Lord என்றும், மற்றொன்று Bless the Lord என்றும் கூறப்பட்டுள்ளது. "Bless the Lord" என்ற வாக்கியத்தின் பொருள் "கர்த்தரை ஆசீர்வதியுங்கள்" என்பதேயாகும். நாம் எல்லோரும் கர்த்தரைத் துதித்திருக்கலாம்.... ஆனால், வெகு சிலரே "கர்த்தரை ஆசீர்வதித்திடும்" பொன்னான பாக்கியம் பெற்றிருக்கிறார்கள்! துதித்து நன்றி செலுத்த சற்று தூரம் நின்றால் போதும்! ஆனால், 'ஆசீர்வதித்திட' ஒருவர் மற்றொருவரை "நெருங்கி" வரவேண்டும்! **"கர்த்தரை நெருங்கி வரும்" பாக்கியம் பெற்றோர் மாத்திரமே அவரை ஆசீர்வதித்திடவும் கூடும்!**

"இராக்காலங்களில் கர்த்தருடைய ஆலயத்தில் நிற்கும் கர்த்தரின் ஊழியக்காரர்களே, நீங்களெல்லாரும் கர்த்தரை ஆசீர்வதியுங்கள் "Bless the Lord" என்று 134-ம் சங்கீதம் துவங்குகிறது. 'இராக்காலம்' என்பது நம் வாழ்வில் கடந்து வரும் துன்ப நேரங்களேயாகும்!

ஏராளமான வியத்தகு நன்மைகளை தங்கள் வாழ்வின் "இராக்காலத்தில்" கண்டு பெற்று ருசித்த இந்த சீஷர்கள் செய்திடும் அற்புத பிரதி உபகாரம் ஒன்றே ஒன்றுதான்: தங்கள் உள்ளமெல்லாம் நெகிழ, தங்கள் கரத்தை உயர்த்தி தங்கள் எஜமானனை ஆசீர்வதிப்பதுதான்! 'இராக்காலத்தில்' கர்த்தரை நெருங்கி அவரை ஆசீர்வதித்திடும் பாக்கியத்திற்கு இணையானது இந்த உலகில் யாதொன்றும் இல்லை.... இல்லவே இல்லை!

*-tr*

பெட்டகம் 39 ஜூன் 2023 பரல்கள் 06



## தேவனுக்கு மாத்திரமே மகிமை செலுத்துங்கள்!

“சுய மகிமையில் சீழ் பிடிக்கும்!” என்பது பொதுவாக கூறப்படும் உண்மையான வாசகமேயாகும். இதை வேதம் கூறும்போது “அழிவு வரும் முன், மனுஷனுடைய இருதயம் இறுமாப்பாயிருக்கும்” என்றே கூறுகிறது (நீதி.18:12). பிலிப்பியர்.3:3-ம் வசனம் “மாம்சத்தின் மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மை பாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்!” எனக்கூறும் இந்த வசனத்தையும் மனதில் கொள்ளுங்கள். இன்னும் அதிகமாய் “மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே (அவரை மாத்திரமே) மேன்மை பாராட்ட வேண்டும்” என 1கொரி.1:30-ம் வசனம் எடுத்து கூறுவதையும் பாருங்கள்!

ஆகவே, ஒருவன் தன்னைக் குறித்து மகிமைப்படுத்தாமலும், அல்லது மேன்மை பாராட்டாமலிருப்பதும் தாழ்மையின் ரூபமாகும்! ஒருவன் “கர்த்தரைக் குறித்து மேன்மைபாராட்ட முடியாதிருந்தால்” அதற்குப் பெயர் தாழ்மை அல்ல! அவன், விசுவாச தைரியம் இல்லாதவன்! தெய்வ விசுவாசத்திற்கும் தெய்வ அன்பிற்கும் வெற்றிக் கொடி உயர்த்தாதவன்! நீங்களோ அல்லது உங்கள் சபையோ, கிறிஸ்துவின் மணவாட்டியாய் திகழ வேண்டுமென்றால், உங்கள் அல்லது உங்கள் சபையின் விசுவாசத்திற்கும் அன்பிற்குமே எப்போதும் வெற்றிக் கொடி ஏற்றுங்கள்!

*-Ed*


### 2023 ‘பரலோக பொக்கிஷங்கள்’ சந்தா புதுப்பிக்கவும்

வருட சந்தா ரூ.**170/-** தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **ஜுன் 10-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் **3**பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.**140/-** அயல்நாடு ஒரு பிரதி ரூ.**950/-** அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் **‘புதிது’** என்று குறிப்பிடவும். நன்றி!

ஆவிக்குரிய விழிப்பூட்டும்! அனல் குன்றா வழிகாட்டும்! அசல் உயர்த்தி போலி அகற்றும்!
சமரசம் மறுத்து சத்தியம் பேசும்! குருவின் அடிச்சுவடில் சீஷர்களை எழுப்பும்!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலமும் அனுப்பலாம்)
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 9843049935 Ph (O) 0452 - 3585200
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : paralogapokkishangal

## தேவனால் உழப்பட்ட நிலம், பலன் தரும்!

*உருவழிந்து, உருவாக்கும் கர்த்தர்*

உண்மையான கிறிஸ்தவ ஜீவியம், பரவசம் நிறைந்ததாகும். தேவன் ஒன்றைச் செய்தால், அது உயர்வானாலும் தாழ்வானாலும், அங்கே ஒரு 'பலனை' வைத்திருப்பார். ஏசாயா 28:24-ம் வசனத்தில் "உழுகிறவன் விதைக்கிறதற்காக நாள்தோறும் உழுகிறதுண்டோ?" என கூறப்பட்டிருப்பதைப் பாருங்கள். அன்றொருநாள், இளம் காலை வேளையில், ஓர் அழகிய புல் மைதானத்தைக் கண்டு ரசித்து, அதின் ஓரமாய் மகிழ்ச்சியுடன் நடந்தேன். ஒரே அளவில் வளர்ந்திருந்த அந்த இளம் புல் 'பச்சை கம்பளம்போல்' பச்சையாய் அடர்ந்து வளர்ந்திருந்தது! அந்த பரந்த புல்வெளி ஓரத்தில் ஓங்கி வளர்ந்த ஓர் மரம் இருந்தது. அதன்மேல் ஏராளமான சிட்டுசிட்டுப் பறவைகள் அமர்ந்து கொண்டு இனிமையான 'ஆகாயத்துப் பாடலைப்' பாடிக்கொண்டிருந்தன. அந்த மரத்தின் நிழலில், இரண்டு பசுக்கள் பூரண மகிழ்ச்சியுடன் படுத்து அசைபோட்டுக் கொண்டிருந்தன. அந்த பசும்புல் ஓரங்களில் மஞ்சள் நிற பூக்களும் நீல வர்ணப் பூக்களும் மலர்ந்து அசைவாடிக் கொண்டிருந்தன! அந்த புல் மைதானத்தின் வேலியின் சுவற்றில் சாய்ந்து கொண்டு, இந்த கண்கொள்ளா காட்சியை ரசித்து, ஆண்டவரை ஸ்தோத்தரித்து, "என் மனதை நிறைத்த இந்த புல் மைதானத்தின் அழகைப்போல் வேறு எதுவும் இல்லை" என்ற மனநிறைவோடு வீடு திரும்பினேன்.

**அடுத்த நாள் காலையில் அதே புல் மைதானத்தை நோக்கி நடந்து சென்றபோது, எனக்கு பேரதிர்ச்சி காத்திருந்தது! ஆம், அந்த அழகிய புல் மைதானம் முற்றிலும் உருமாற்றப்பட்டுக் கிடந்தது!**

அந்தப் பச்சை புல் நிலத்தில், உழவர்கள் ஆழ உழுது பசுமையை கவிழ்த்து, கரிசல் மண்ணாக்கிப் போட்டிருந்தார்கள். புல்வெளியின் ஓரத்தில், அதைப் புரட்டிப்போட்ட உழவன், பெரிய கலப்பையோடு இளைப்பாறிக்கொண்டிருந்தான்! உள்ளம் கவர்ந்த அந்த பசுமை நிலம், அழகற்ற மண்ணினால் புரட்டப்பட்டுக் கிடந்தது. அருகிலிருந்த தனி மரத்தில் இப்போது அழகிய பாடும் பச்சிகளை காண முடியவில்லை! அதற்கு பதிலாய் உழவுசாலில்

ஓடிக்கொண்டிருந்த புழுக்களை தின்பதற்கு சில கோழிகள் ஓடித் திரிந்தன. அங்கு இருந்த மஞ்சள் பூக்களும், அசைந்தாடிய பல வண்ணப் பூக்களும் இப்போது அங்கேயில்லை. "இத்தனை அழகுள்ள இந்த பசுமை யான மைதானத்தை உழுது பாழாக்க, இவர்களுக்கு எப்படித்தான் மனம் வந்ததோ?" என துக்கத்துடன் சிந்திக்கத் தொடங்கினேன். அப்போது ஒரு குளிர்ந்த காற்று என் மனக்கண்ணை திறந்து விட்டதை உணர்ந்தேன்:

**மனக்கண்ணினால் நான் கண்ட புதிய காட்சியில், விளைந்த கோதுமை மணிகளைக் கொண்ட கதிர்கள் மிகுந்த பொலிவுடன் 'அறுவடைக்கு காத்திருந்து' மகிழ்ச்சியுடன் அசைவாடிக்கொண்டிருந்தன. அந்த பொன்னிறமான கதிர்கள் காற்றில் அசைவாடிய சலசல சத்தத்தைக் கேட்டு உள்ளம் குளிர்ந்தேன்!**

அந்த நிலத்தில் பாய்ந்தோடிய காற்று, இனிமையான இன்னிசையை ஒலிக்கச் செய்தன. இப்போது நான் தரிசனத்தை விட்டு, சுய நினைவிற்கு திரும்பி அந்த அழகற்ற மண்ணை 'மீண்டுமாய்' பார்த்தேன். பொன் கதிர்கள் நிறைந்த பலன்களை கொடுக்கப்போகும் **அழகிய நிலமாகவே** கண்டேன்! உள்ளம் பூரித்தேன்!

*நமது தெய்வீக உழவனான ஆண்டவர், நம் ஆத்துமாவை உழுது, அதை சால்களாக்கிப் போட்டு விட்டாரே! நம் பார்வைக்கு அழகானதாய் தோன்றியதை வெறுமையாக்கியதைப்போல் நிகழ்த்திய கர்த்தரின் செயல் "இனி வரும், ஏராளமான விளைச்சல்களை தரப்போகிறார்" என நம்முடைய தரிசன காட்சியாய் இப்போதே காண்பது நல்லது! ஆகவே, என் ஆத்துமாவில் கர்த்தர் தம்முடைய கலப்பையைக் கொண்டு ஆழமாய் உழுதிட வருகிறார் என்ற உண்மையை அறிந்த பின்பு, எந்த சூழ்நிலையிலும் இனி நாம் பயப்படுவதில்லை!*

எதையாவது செய்துவிட்டு சும்மா போய்விடும் பொறுப்பற்ற விவசாயி அல்ல நம்முடைய கர்த்தர்! அவருடைய நோக்கமெல்லாம் திரளான விளைச்சலின் பலனேயாகும்! ஆமென்.

- *Mrs.சார்லஸ் கஃவ்மென்*

---

## 'தானும், தேவனுமாய்' வாழ்வதே பரலோகம்!

*பிறருடைய காரியம் அறிய நாடுவது துன்மார்க்கம்*

இன்றைய முழு மனுவர்க்கமும் ஓர் ஆவிக்குரிய கொடூர கொள்ளை நோயால் பீடிக்கப்பட்டு அல்லல்படுகின்றது. இப்பாழும் நோய் என்னவெனில், மற்றவர்கள் அலுவலில் தங்களை **வீண் அலுவல்காரர்களாய்** நுழைத்துக் கொள்வதுதான்! தனக்குச் சம்பந்தமில்லாததும், தங்கள் பொறுப்புக்கு அப்பாற்பட்டதும்,

*தங்களால் யாதொன்றும் செய்திடக் கூடாததுமான காரியங்களைத் தங்கள் மேல் ஏற்றுக் கொண்டு வீணாய் பொதி சுமப்பவர்கள்!*

*"ஆண்டவரே, இவன் காரியம் என்ன?" என யோவானைக் குறிப்பிட்டு கேட்டுவிட்ட பேதுருவுக்கு, அம்பு எய்ததுபோல் இயேசு கூறிய வார்த்தைகளைக் கேளுங்கள்:*

**"உனக்கு ஏன் இந்த பிறர் விஷயத்தைக் குறித்த தலையீடு? நீ என்னைப் பின்பற்றி வா!" என கூறிவிட்டார் (யோவான் 21:22). இந்த வார்த்தையை நாம் யாவரும், நமது வாழ்வெனும் போர்க்களத்தின் முழக்கமாகவும், தலையாய கோட்பாடாகவும் வைத்துக் கொள்வோமாக!**

*தங்கள் அலுவலைப் பார்ப்பதற்கு உண்மையுள்ளவர்களாயும், வைராக்கியமுள்ளவர்களாயும் இருப்பதற்குப் பதிலாக, மற்றவர்கள் அலுவலில் தங்களைப் புகுத்திக்கொள்ளும் இத்துர்நாற்றமான கொள்ளை நோயைக்குறித்து 1பேதுரு 4:5-ம் வசனத்தில் இன்னமும் சற்று வெளிப்படையாய் விவரிக்கப்பட்டுள்ளது: "உங்களில் ஒருவன் எக்காரணம் கொண்டும் கொலைபாதகனாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது* **மற்றவர் காரியங்களில் தலையிட்டுக் கொண்டவனாயாவது, பாடுபடுகிறவனாய் இருக்கக்கூடாது". ***மற்றவர்கள் அலுவலில் தலையிட்டுக் கொள்வது எத்தனை மதியீனம் என இவ்வசனம் தெளிவுபடுத்துகிறதே! இன்னொருவர் அலுவலில் தங்களை நுழைத்துக் கொள்பவர்கள் யார் தெரியுமா? கொலைகாரர்களும்! திருடர்களும்! ஆம், இந்த வசனத்தின்படி கொலைகாரர்களோடும், திருடர்களோடும் இந்த வீண் அலுவல்காரர்கள் கைகோர்த்து விட்டார்கள்.*

**இவர்கள் சமபங்காய் சம்பாதித்து வாரிக் கொண்டதெல்லாம், தேவையில்லாத பாடுகள்தான்! இங்ஙனம் பிறர் பாடுகளின் துயரத்தில் வீழ்வது புத்தியீனமல்லவா? இவ்வுலகம், ஓர் மனிதனுக்குத் தேவையான பாடுகளை தன்னகத்தே வைத்திருக்கிறதே... இதில் நாமே இன்னமும் கூட்டிக் கொள்வதா?**

*காரியம் இப்படியாய் இருக்க, நம்மை நாமே வெறுத்து, இந்த அபாயமான வீண்தலையீடுகளைத் தவிர்த்து, அதற்குத் தூர விலகி நிற்பது மிகுந்த ஞானமன்றோ! இதுபோன்ற காரியங்களிலிருந்து நம் துருதுருத்த விரல்களை இழுத்து மடக்கிக் கொள்வதே நன்மை பயக்கும்!*

*மற்றவர்களுக்கு என்ன நடந்தது என்ற ஆர்வமும், பிறரை நியாயம் தீர்த்தலும் நம்மில் கட்டோடு ஒழியக்கடவது. இதில் நமக்கு எந்த ஈடுபாடும் இருக்கக்கூடாது!*

*நம்முடைய ஒரே அலுவலாய் இருக்க வேண்டியதெல்லாம், கிறிஸ்துவை நம் எல்லா பெரிய அல்லது சிறிய விஷயத்திலும் 'சீரியஸான' உண்மையோடு பின்பற்றுவதுதான்! பூமிக்குரிய அல்லது ஆவிக்குரிய காரியங்களில் நாம் தொடர்ச்சியான உண்மையோடு ஜீவிக்கிறோமே, அது ஒன்றே நம் அலுவல்! அடுத்து, ஒன்றும் இல்லை! அப்படியானால், நீங்கள் மற்றவர்கள் காரியங்களுக்குத் தூர.... தூர விலகி நிற்க வேண்டியதுதானே!*

**அவ்வாறு விலகி நின்று, இந்த மற்றவர் அலுவலின் தலையீட்டை உங்கள் முழு பெலத்தோடும் கடுமையாய் எதிர்த்து புறக்கணியுங்கள்...! வெறுத்துத் தள்ளுங்கள்...! அவைகளைக் குப்பையென எறிந்துவிடுங்கள்...! அவைகளை ஆக்ரோஷமாய் ஆக்கினைக்குள்ளாக்கி, நியாய தண்டனை வழங்குங்கள்...!**

*இவ்வித ஆணித்தர உறுதி பூண்டால் மாத்திரமே, தேவையற்ற ஏராளமான வீண்பாடுகளின் துயரத்திற்கு நீங்கலாயிருப்பீர்கள். இதற்கு கைமாறாக, தொடர்ச்சியான மகிழ்ச்சியும், சமாதானமும், தேவனுக்குள்ளாய் அனுபவிக்கும் அற்புத இளைப்பாறுதலும் உங்களில் நிறைந்து வழியும்!*

*மற்றவர்கள் என்ன சொன்னார்கள் அல்லது என்ன செய்தார்கள், அல்லது என்னத்தை உதாசீனம் செய்து சொல்லாமல் விட்டார்கள் அல்லது செய்யாது விட்டார்கள்.... இதுவெல்லாம் 'அவர்களுடைய' அலுவலகத்து வேலை! அவர்களின் அலுவலகத்தில் உங்களுக்கு வேலை கிடையாது!*

*யாரேனும் நமக்கு அநீதியான தீங்கு செய்தால் செய்யட்டும்... அது அவர்கள் வாங்கிக்கொண்ட வேலை! அந்த அநீதியிலும் நாம் பொறுமையுடன் நடந்து, அவர்கள் இழைத்த அநீதியினிமித்தம் மகிழ்ச்சி மாத்திரமே கொண்டு, தீமைக்கு நன்மை செய்கிறோமே, அது ஒன்றே நம் தலையாய கடமை!*

**இப்படி வாழ்ந்தால், பரலோகத்தை இந்த பூலோகில் 'வருக!' என வரவேற்றுக் கொண்டு வருவது திண்ணமன்றோ!**

*சாத்தானுக்கும், அவனுக்குரிய தீவிர அலுவல் உண்டு! நம்மை அவன் சோதித்து, கூடுமானால் அச்சோதனையில் வீழ்ச்சியடையச் செய்வதும், நம்மை அதைரியப்படுத்துவதும், சோர்வுற்று நம் நம்பிக்கையை இழக்கச் செய்வதும் அவனுடைய ஒரே அலுவல்! அவன் தன் அலுவலை எவ்வளவு மூர்க்கமான வைராக்கியத்தோடு நிறைவேற்றத் துடிக்கிறான் பாருங்கள்!*

நம் நேச ஆண்டவரின் அலுவல் என்ன தெரியுமா? நாம் சோதனையைத் தாங்க முடியாத அளவு 'திராணிக்குமேல் சோதிக்கப் படாதபடி' கரிசனையாய் கண்காணிப்பதுதான்! (1கொரி.10:13). ஆ, இது எத்தனை பெரிய ஆறுதல்! இது நம்மை ஆழமான நம்பிக்கைக்குள் நடத்தி 'தன் ஆசீர்வதிக்கப்பட்ட கிரியையை' அப்பழுக்கில்லாத உண்மையோடு ஆண்டவர் நம்மில் செய்து முடிப்பார் என்ற எதிர்காலத்திற்குரிய உத்திரவாதத்தை நமக்கு கையளிக்கிறதே!

**நம்முடைய அலுவல் என்ன? நூற்றுக்கு நூறு உண்மையாய் இருத்தல்! திடமாய் நின்று எல்லா சோதனைகளையும் ஜெயித்து வெற்றி வாகை சூடுதல்! சாத்தான் நம்மைக் கண்டாலே ஓடும்படியாக அவனைக் கடுமையாய் எதிர்த்து நிற்பதுமாகிய அலுவலே ஆகும்!**

இவ்வாறாக நம்முடைய அலுவலில் மாத்திரமே தீவிரம் கொண்டிருந்தால், ஆண்டவர் நமக்கு உண்மையுள்ளவராயிருந்து நம்மை பெலப்படுத்துவார்! ஆம், அது அவரது பணியன்றோ! இவ்விதமாய் நம்மை ஆசீர்வதிப்பதுதான் அவரது வாஞ்சையான ஒரே பணி! அதில் அவர் ஒருபோதும் மெத்தனமாய் இருக்கவே மாட்டார்.

**இன்றிலிருந்து, நாம் மற்றவர்கள் காரியங்களில் தலையிட்டு நமக்குத் தேவையில்லாத உபத்திரவங்களில் சிக்கிக் கொள்வதில்லை என்ற நமது தீர்மானத்தை தேவன் காண்பாராக!**

ஆனால் அதே சமயம், நம் வாழ்க்கையில் நாம் சந்திக்கும் "அவசியமான" உபத்திரவங்களில் உறுதியாய் நின்று, அவைகளை ஜெயித்து வருவதையும் தேவன் காணட்டும்! இப்படி அவர் நம்மைக் காண முடியுமென்றால்... இதுபோதுமே! இப்போது என்ன செய்வார் தெரியுமா? **நம்மை முடிவில் ஜீவகிரீடம் சூடும்படி** செய்வதற்கான பொறுப்பை அவரே எடுத்துக் கொள்வார்.

இனிமேலாவது மற்றவர்கள் காரியங்களில் அல்லது பிரச்சனைகளில் தலையிடும் இழிசெயலுக்கு சாவுமணி அடியுங்கள்! தேவனுடைய கிரியைகளில் வீணாய் நுழைத்துக் கொள்ளாமலும் இருங்கள்! கடைசியாக, சாத்தான் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறான்? எனவும் அக்கறை கொள்ளாதீர்கள்!

ஆனால், இதுவரை நீங்கள் அக்கறை கொள்ளாது போய்விட்ட உங்கள் பரிசுத்தத்தில், உங்கள் தாழ்மையில், இனிமேலாவது தீவிர அக்கறை கொள்ளுங்கள்!

- எலியாஸ் அஸ்லாக்சன்

## ‘ஆழமாய் பிரசங்கித்தாலும்’ ஜீவியமில்லாமல் பலன் இல்லை!

*உத்தம ஜீவியமே, ஊழியத்தின் ஆதாரம்*

*சபையின் ஊழியப்பணி இருபக்கங்களைக் கொண்டதாகும். i) உலகமெங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது ii) அவ்வாறு பிரசங்கிக்கப்படும் சுவிசேஷம், புதிய உடன்படிக்கையில் இயேசு வாழ்ந்து பின்வைத்த அவரின் அடிச்சுவடின் வாழ்விற்கு நடைமுறையில் ஒத்திருப்பது!*

தேவ வசனம் ‘விதைக்கு’ ஒப்பிடப்பட்டிருப்பதை நாம் அறிவோம். ஆகவே அந்த விதையை விதைப்பவர்களுடைய ஆவிக்குரிய நிலைமை எந்த நிலையில் இருந்தாலும் அந்த விதையோ ‘ஒரே பலனைத்தான்’ தர வேண்டும். **ஆனால்.... ஆவிக்குரிய ரீதியில் இவ்வாறு சம்பவிப்பதில்லை!** “ஒரே செய்தியே” ஜனங்களுக்குப் பிரசங்கிக்கப்பட்டாலும், அதைப் பிரசங்கித்த மனிதர்களின் தேவபக்தி “வெவ்வேறு வித்தியாசமான” வாழ்க்கையாய் இருக்கும் பட்சத்தில், அவரவருடைய வாழ்க்கையின் அடிப்படையைக் கொண்டுதான் மனந்திரும்புகிறவர்களுடைய ஜீவிய தரமும் வெவ்வேறாய் அமைந்துவிடுகிறது! ஆம், பிரசங்கித்தவர்களின் வாழ்க்கைத் தரத்தின் அடிப்படையிலேயே பலனும் கிட்டுகிறது!

லோக சிந்தையில் சிக்குண்டு, ஆவிக்குரிய தன்மையை இழந்த ஒரு சபை, கடல் கடந்து சென்று வேறு பாஷைக்காரரிடத்திலும், வேறு கலாச்சாரம் கொண்ட ஜனங்களிடத்திலும் இவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தாலும், பிரசங்கித்தவர்களின் ‘கீழ்த்தரமான’ ஜீவிய தரத்தின்படிதான், இவர்கள் ஒன்றை உருவாக்கிட முடியும்!

**பார்த்தீர்களா, வெறும் வார்த்தை மாத்திரமல்ல.... பிரசங்கித்தவர்களின் குணாதிசயம் மாத்திரமே பலனை தீர்மானம் செய்கிறது!**

ஒரு சபை, தன்னிலிருக்கும் செடியின் ஜீவியத்தை ஒட்ட வைத்திட மாத்திரமல்லாமல், வேறு எதுவும் செய்திட முடியாது! தன் தேசத்தில் இவர்கள் கொண்ட சபையின் தரத்தை மாத்திரமே, வேறு தேசத்திலும் இவர்கள் நட்ட வைத்திட முடியும்! ‘ஜீவன்’ உள்ள யாதொன்றின்மீதும் தேவன் பதித்து வைத்துள்ள மாறாத சூத்திரம் யாதெனில்: *“தன் தன் இனம் தன் தன் இனத்தை மாத்திரமே உற்பத்தி செய்திட வேண்டும்!”* என்பதுதான்.

உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டியது தான் சபையின் தலையாய கடமை என இன்று கூறப்படுவது, முற்றிலும் சரியானதல்ல! ஆம், சபையின் முதலாவது தலையாய கடமை, சுவிசேஷத்தை பிறருக்கு பிரசங்கிப்பதற்கு முன்பாக, ஒருவன்

*ஆவிக்குரிய தகுதியுடைய வாழ்க்கையைப் பெற்றிருக்க வேண்டும் என்பதுதான்!*

**நம் ஆண்டவர் "நீங்கள் போங்கள்...." எனக் கூறியது உண்மைதான். ஆனால் அதே சமயத்தில் அவர்களை "நீங்கள் காத்திருங்கள்...." என்றும் கூறினார். வேதம் நமக்கு தெளிவாய் காட்டுகிறபடி, நாம் போவதற்கு முன்பாக முதலாவது காத்திருக்க வேண்டும்!**

*இயேசுவின் சீஷர்கள் பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பாகவே மிஷனெரிகளாய் புறப்பட்டுச் சென்றிருந்தால் "ஆவிக்குரிய பேரழிவுதான்" ஏற்பட்டிருக்கும்! ஏனெனில் இவர்கள் தங்களைப் போன்ற வாழ்க்கையைத்தான், தாங்கள் பிரசங்கித்தவர்களுக்குத் தந்திருக்க முடியும்.... அதன் விளைவாய், அன்று தொடங்கி இன்று வரை கிறிஸ்தவத்தின் முழு சரித்திரமும் சீரழிந்த வாழ்க்கையாய்தான் அமைந்திருக்கும்! பெலனற்ற, தரம் குறைந்த கிறிஸ்தவத்தை புறஜாதி தேசத்திற்கு சென்று பிரசங்கிப்பது ஒன்றும் கிறிஸ்துவின் கட்டளையை நிறைவேற்றியதாக ஒருபோதும் அர்த்தமாகாது! நம் ஆண்டவர் இயேசு கடிந்து உரைத்த "ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும், பூமியையும் சுற்றித் திரிகிறீர்கள். அவன் உங்கள் மார்க்கத்தான் ஆனபோதோ, அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள்" என்ற மத்தேயு 23:15-ம் வசனம் என் ஆத்துமாவை வெகுவாய் பாதித்த வசனமாகும்!*

*ஆனால் இன்றைய சுவிசேஷ கிறிஸ்தவமோ, புதிய உடன்படிக்கையின் ஜீவிய தரத்திலிருந்து வெகு தொலைவில் நிற்பது சொல்லொண்ணா துயரத்தையே நமக்குத் தருகிறது.*

**இன்று சபை தேய்ந்து, தன் ஜீவியத்தோடு உலகத்தையும் ஏற்றுக்கொள்வது சாதாரண சகஜமாகிவிட்டது!**

*ஆவிக்குரிய தன்மையிலிருந்து சபை விலகி 'சமூக சேவை' என்னும் மார்க்க போர்வையில் பின்னடைந்துவிட்டது. இன்று சபையில் பரிசுத்தவான்கள் ஒன்றும் உற்பத்தியாகி வரவில்லை! இன்று சபையில் உயர்ந்திருக்கும் மாதிரிகள் "செழித்த வியாபாரிகள்" "திறமையான கிரிக்கெட் வீரர்கள்" "சினிமா பாணி கொண்ட சௌந்தரியவான்கள்" .... அவ்வளவுதான்! இந்த இலட்சணத்தில் இவர்கள் மார்க்க சம்பந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறார்கள்.... அதையும் இன்றைய நாகரீக விளம்பர உத்திகளோடு செயலாற்றுகிறார்கள். இன்று சபைக்கு வருபவர்களின் அநேக வீடுகள் 'சினிமா கொட்டகைகளாய்' மாறி விட்டன! இன்று சபைகளிலிருந்து வெளியிடப்படும்*

*பத்திரிக்கைகள், புத்தகங்கள் ஆழமற்றதாய், பரிசுத்தத்தின் அக்கினியை தங்கள் புத்தகங்களின் விளிம்பின் ஓரத்திற்கு (Border) மாத்திரமே தள்ளி வைத்துக்கொண்டார்கள். இத்தனை கேடாய் நடந்து கொண்டிருந்தாலும், சபையிலிருக்கும் ஜனங்களோ அதைக் கண்டும் காணாதது போலவே அலட்சியப்போக்கில் வாழ்கிறார்கள்!*

*வெகு சீக்கிரமாய்.... குறைந்த பட்சம் இந்த கடைசி 20-வருடங்களுக்குள்ளாகவே கிறிஸ்தவம் மறுமலர்ச்சி கொண்டு, ஆர்த்தெழ வேண்டும்! அவ்வாறு சம்பவிக்கவில்லையென்றால், "மெய் கிறிஸ்தவமே" நம் தேசத்தில் இல்லாமல் போய்விடும்! அரைகுறை, நாற்றமெடுத்த ஜீவியம் கொண்ட கிறிஸ்தவர்களின் சதவீதம் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே போவதில் ஒரு பிரயோஜனமுமில்லை! நமக்குத் தேவையாய் இருப்பதெல்லாம் கிறிஸ்துவின் சீரிய வாழ்விற்கு மறுரூபமடைந்த ஒப்பற்ற கிறிஸ்தவமேயாகும்!*

*- A.W.டோசர்*

---

## தீய வெறுப்பின் சூழ்நிலை "என்னையே எரித்திட" நடத்தியது!

*எத்தனை துன்பங்களும், ஒப்புக்கொடுத்த ஆத்துமாவில் அடங்கும்*

*தந்தை லா - கோம்பே அவர்கள் திரும்பி வந்தவுடன், என்னை காண வந்தார். நான் சற்று ஆச்சரியப்படும்படி 'தன் பெலவீனத்தை' என்னிடம் கூறினார்: "நீங்கள் ஜெனிவா திரும்புவதே நல்லது! இந்த பிரான்ஸ் தேசத்தில் கர்த்தர் உங்களை பயன்படுத்துவார் என்ற சாத்திய கூறு இல்லை. ஏனெனில் உங்களைச்சுற்றி எல்லாமே இருளாயிருக்கிறது" என கூறினார். அச்சமயத்தில் ஜெனிவா பிஷப், பாரீஸ் தந்தை லா-மோத்தேக்கு கடிதம் எழுதி என்னை மீண்டும் ஜெனிவாவிற்கு அனுப்பி வைக்க கூறினார்! அப்படியே செய்யும்படி தந்தை லா - மோத்தே அவர்களும் எனக்கு கட்டளையிட்டு எழுதினார்!*

*நான் உருசுலின் மடத்து என் சொந்த சகோதரியிடம் சற்று கசப்பான அனுபவத்தை கடந்து வந்தவுடன் என் கண்ணிற்கும் மூக்கிற்கும் நடுவே இருந்த வலி, திரும்பவும் என்னைத் தாக்கியது. நல்ல பிராண வாயு இல்லாத அறை, வெளியிலிருந்து அறைக்குள்ளே வந்த சத்தங்கள் என்னுடைய வலியின் வேதனையை இன்னும் அதிகரித்தது. இதனிமித்தமாய் என் தலையும் அதிக பாரம் கொண்டதைப்போல் உணர்ந்தேன்.* **ஆகிலும் என் உள்ளத்தில் இருந்த சந்தோஷம் முன்பு இருந்ததைவிட அதிகமாய் இருந்ததை உணர்ந்தேன்.** *என்னைச் சுற்றிலும் இருந்த சில நல்ல ஆத்துமாக்கள் என் நிலைமைக்காக பரிவும் பட்சதாபமும் கொண்டிருந்தார்கள். இவர்களைத் தவிர, மற்றவர்களோ*

*என்மீது கோபமாயிருந்தார்கள்! அதற்கு முகாந்தரம் என்னவென்றால், என்னைத் தூற்றிய மடத்தின் பொய்யான செய்திகளை அவர்கள் நம்பியதே காரணம் ஆகும். அவர்களுக்கு என் உள்ளான நிலைமை தெரியாது. மற்றவர்கள் என்னை ஏன் பகைக்கிறார்கள் என்றுகூட அவர்களுக்குத் தெரியாது!*

**என் வேதனையை அதிகரிக்கும்படி, என் மகள் அதிக நோய்வாய்பட்டு, மரணதருவாய்க்குள் சென்று விட்டாள். அவள் பிழைப்பாள் என்ற 'ஓர் சிறிய நம்பிக்கையைத் தவிர' வேறு ஒன்றும் எஞ்சியிருக்கவில்லை. இந்நிலையில், என்னுடைய ஆத்துமா சகலத்தையும் தேவனிடத்தில் ஒப்புவித்து விட்டு, என் இருதய குடியிருப்பில், அமைதியும் சமாதானமும் மாத்திரமே இருக்கும்படி கர்த்தர் அநுக்கிரகம் செய்தார்!**

*"ஓ என் ஆளுகை கர்த்தரே, என் நேசத்திற்கு நீர் ஒருவர் மாத்திரமே எனக்கு பாத்திரர். நான் உமக்கு ஊழியம் செய்வதோ அல்லது என் அர்ப்பண அஞ்சலியை உமக்கு நான் படைப்பதோ, இப்போது எனக்கு மாறி மாறி சோகங்கள் ஏற்படுவதோ, என் மனதில் கிலேசங்கள் ஏற்படுத்தவில்லை! ஓ கர்த்தாவே, என் சொந்த உணர்வுகள் கூட, எனக்கு துரோகம் செய்து ஓடுவதைப்போல் இருந்தாலும்..... எனக்கு தீங்கு ஏற்படுத்தும் ஏராளமான பூச்சிகள் என் ஆத்துமாவை சுற்றி வந்தாலும், என் ஆத்துமா தேவனுக்கே முற்றிலும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது" என கர்த்தரிடம் கூறினேன். என்னுடைய அறிக்கையின் பொருளை "ஒருவர் ஒருபோதும் மனக்கிலேசம் அடைவதில்லை" என்பது பொருளாகாது! அதுபோன்ற உத்திரவாதம் பரலோகம் மாத்திரமே!*

**என் உணர்வுகளை தாக்கும் துன்பங்களை நான் ஒதுக்கி தள்ளவில்லை. அல்லது மேலோட்டமாய் வந்துபோகும் அசுத்தங்களையும் நான் ஏற்றுக்கொள்ளவில்லை. இவைகள் யாவும் என்னை புடமிட்டது என்றே நான் கருதினேன்!**

*ஆகிலும், என் ஆத்துமாவின் புனிதமான பொன்னை, நான் கடந்து சென்ற துன்பங்கள், சற்று மாசுப்படியச் செய்ததோ? என்றே திகைத்தேன்! துன்பத்தின் அக்கினி எத்தனை மடங்காயிருந்தாலும் 'என் தலை முடி ஒன்றாகிலும்' கருகிடக்கூடாதே என்று வாஞ்சித்தேன்!*

*இந்த சமயத்தில் "நான் அக்கினியில் தூய்மையாக்கப்படுவதை விட, நானே எரிக்கப்பட வேண்டும்" என்ற தேவையை உணர்ந்தேன். இக்காலத்து சூழ்நிலையில் என்னை அவ்வாறு ஒப்புக்கொடுப்பதை சிறந்த வழியாகவும் கண்டேன்!*

*- மேடம் குயான்*

## ‘ஆத்துமாக்களை’ ஆதாயம் செய்திட ஞானம் வேண்டும்!

*ஆத்தும கரிசனை, ஏற்ற ஞானத்தை பிறப்பிக்கும்*

பலவிதமான நிலைமையுள்ள ஜனங்கள் நடுவில் ஊழியம் செய்யும்படியே நாம் அனுப்பப்பட்டிருக்கிறோம். அந்த "ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்" (நீதி.11:30). ஆகவே, யாரோடு எவ்விதமாய் பேச வேண்டுமென்ற ஞானம் நமக்கு வேண்டும். தங்களின் பாவத்தை அற்பமாய் நினைக்கிறவர்களும், தேவனைத் தேடாதவர்களும், சத்தியத்தை நம்பாதவர்களும், சுயநீதிக்காரரும், பின்வாங்கிப் போனவர்களும், கடினப்பட்டவர்களும், இரட்சிக்கப்பட விரும்புகிறர்களுமாக பற்பல வகுப்பார் இருப்பார்கள்.

**"யாரிடத்திலும், எதைப் பேசினாலும் சரிதான்" என்றெண்ணுவது பிசகு! மீன் பிடிக்கிறவர்களிடத்தில் அந்தந்த மீன்களுக்குரிய வெவ்வேறு வலைகள் இருக்கிறது.**

அப்படியே பட்சிகளைச் சுடுகிற ரவைகள் வேறே! மிருகங்களைச் சுடுகிற குண்டுகளும் வேறே! கண்ணிகளிலும், அந்தந்தப் பட்சிகளுக்குரிய கண்ணிகளைக் கொண்டுதான் அவைகளைப் பிடிக்க வேண்டும்! ஞானமாகிய கிறிஸ்துநாதர் நிக்கொதேமுவினிடத்தில் பேசின மாதிரி வேறே, அவர் சமாரியாஸ்திரீயினிடத்தில் பேசினமாதிரி வேறே, சகேயுவினிடத்தில் பேசின மாதிரி வேறே, நாத்தான்வேலிடத்தில் பேசின மாதிரி வேறே, பவுலிடத்தில் பேசின மாதிரி வேறே.... இவ்வாறு, அவரவர்களுடைய நிலைமைக்கேற்ற விதமாய் பேசி அவர்களை ஆதாயம் பண்ணினார்!

*அவரவருடைய ஆத்ம நிலைமைக்கு ஏற்ற விதமாய் பேச நாம் திராணியுள்ளவர்களாயிருக்கும்படி தேவ ஆவியானவரால் போதிக்கப்பட்டிருக்க வேண்டும்! இந்த அறிவு, வேதசாஸ்திரப் பள்ளிக்கூடத்திலிருந்தாவது மற்றவர்கள் கற்றுக்கொடுக்கிறதினாலாவது வராது. வேத பரீட்சையில் வெகுமானங்களைப்பெற்று வேத அறிவில் வல்லவர்களெனப் பேரெடுத்த அநேகர், ஆத்துமாவின் நிலைமைக்கேற்ற விதமாய் வசனத்தை எடுத்து உபயோகிக்கத் திராணியற்றவர்களாயிருக்கிறார்கள். ‘ஆவியினால் போதிக்கப்பட்ட’ ஒரு சாதாரண மனுஷன் பிரசங்கிக்கிறதை அவர்கள் கேட்கும்போது, நாம் எவ்வளவோ கற்றிருந்தும் இந்தச் சத்தியம் நமக்குத் தென்படாமற் போனதே என ஆச்சரியப்படுவார்கள்.*

*அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயும் இருப்பதாக" (கொலோ.4:6). "இளைப்படைந்தவனுக்குச்* ***சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல*** *நான் அறியும்படிக்கு கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளினார்; காலைதோறும் என்னை எழுப்புகிறார், கற்றுக்கொள்கிறவர்களைப் போல நான் கேட்கும்படி என் செவியைக் கவனிக்கச் செய்கிறார்" என்று நம் இரட்சகர் சொல்லி இருக்கிறார் (ஏசாயா 50:4). ஆகையால் "கிறிஸ்துவின் வசனம் நமக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருக்க வேண்டும்" (கொலோ.3:16).*

அவனவனுக்கு எவ்விதமாய் பேச வேண்டுமென்று நாம் போதிக்கப்பட்டிருப்பதோடுகூட, இடம் சமயம் அறிந்து பேசும் ஞானமும் வேண்டும்! ஆத்துமாக்களை ஆதாயம் பண்ண வேண்டுமென்கிற ஆத்திரத்தினால், ஆத்துமாக்களை துரத்தி விடலாகாது! கசாப்புகடைக்காரன் ஒருவனைப் பற்றி ஒரு சிறு புஸ்தகத்தில் வாசித்த ஞாபகமிருக்கிறது. அவன் ஓர் இரவில் நடந்த ஜெபக்கூட்டத்தில் தன் இருதயத்தை கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தான். உடனே மற்ற ஆத்துமாக்களை ஆதாயம் பண்ண வேண்டுமென்கிற ஆசை அவனுக்கு உண்டாயிற்று! மறுநாள் காலையில் கடைக்குப்போய் ஆடு அடித்துத் தூக்கினபின்பு, இறைச்சியை வெட்டும்படி கத்தியைத் தீட்டிக் கொண்டிருந்தான். அந்த நேரத்தில் ஒரு சிறு பெண் இறைச்சி வாங்கும்படி கடைக்கு வந்தாள். அவன் கத்தியை தீட்டிக்கொண்டே அந்தப் பிள்ளையைப் பார்த்து: "சிறு பிள்ளையே நீ சாக ஆயத்தமா?" என்று கேட்டான். ஆயத்தமில்லையென்றால், அதிலிருந்து இரட்சிப்பைப் பற்றிப் பேசலாம் என்பது அவனுடைய நோக்கம்! அந்தப் பிள்ளையோ அவன் தன்னை வெட்டப்போகிறான் என்று பயந்து, அலறிக்கொண்டு ஓடிப்போய்விட்டது.

**நோக்கம் நல்ல நோக்கமாயினும், பேசும் விதத்தில் ஞானமில்லாமற் போயிற்றல்லவா? சிலர் யாரைக்கண்டாலும் எந்த இடத்தில் கண்டாலும் "நீ இரட்சிக்கப்பட்டிருக்கிறாயா? பாவஞ்செய்யாமலிருக்கிறாயா? மரிக்க ஆயத்தமா? தேவனோடு சரியாயிருக்கிறாயா?" என்று பதட்டமாய் கேட்கிறதுண்டு. இப்படிப்பட்ட ஆத்திரமான கேள்விகள் சில சமயங்களில் நல்லவர்களையுங்கூட கோபமூட்டுகிறதாயிருக்கும்!**

இக்கேள்விகள் நல்லவைகள்தான். ஆனால் கேள்விகளை ஆரம்பிக்கிறவிதம் அதல்ல! ஆத்துமாக்கள் பேரில் தீராத வாஞ்சையுள்ள

*நமதாண்டவரும், அப்போஸ்தலரும், எக்காலத்திலுமுள்ள சிறந்த ஊழியர்களும், பாவிகளை இரட்சிக்க விரும்பினபோது, எவ்வளவோ ஞானத்தோடு பேசி அவர்களை ஆதாயம் பண்ணிக்கொண்டார்களென்று பார்க்கிறோம்.* **மீன் பிடிக்கிறவர்களைச் சீஷராக்க விரும்பின ஆண்டவர், அவர்களோடு சேர்ந்து மீன்பிடிப்பத்தில் கவனஞ் செலுத்தினதையும், சமாரிய ஸ்திரீயை இரட்சிக்கத் தீர்மானித்தவர், அவளிடம் தாகத்துக்குத் தண்ணீர் கேட்ட ஞானத்தையும், மனதில் வைப்போமாக!** *நம்முடைய ஜாடையும் பேச்சும் கேட்போருக்கு வெறுப்பை உண்டாக்கிவிடுமானால், நம்முடைய சுவிசேஷத்திற்கு அவர்கள் செவிகொடுப்பதெப்படி? சகோதரரே! இது விஷயத்தில் நமக்கு ஞானமில்லையே என்று உணருவோமானால் நல்லது!* **இந்தப் பரம ஞானம்** *தன் குறைவை உணருகிறவனுக்குத்தான் வாக்குபண்ணப்பட்டிருக்கிறது. "ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய் கொடுக்கிறவரும், ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" (யாக்கோபு 1:5). நாம் ஞானத்தை, அவருடைய மகிமைக்காகக் கேட்கும்போது நிச்சயமாகவே அவர் தம்முடையவர்களுக்கு கொடுக்கிறார்!*

*- பரமானந்தம் ஐயர்*

---

## "இதயம் தூய்மையானால்" மாய இன்பம், தானாய் மறையும்!

*'இதய அசுசி' பரலோகத்தையும் வெறுக்கும்*

இ*வ்வுலக அசுசியையும், அதன் மீது கொண்ட அன்பையும் சிலுவையில் அறைந்துவிட, இதய தூய்மையைக் காட்டிலும் மேலானது ஒன்றுமில்லை! ஒரு மனுஷனுடைய* **இருதயம் தூய்மையாகிவிட்டால்,** *"இந்த உலக மாய இன்பங்களை நீ உதறி விடு!" என அவனுக்கு நாம் கூறுவதற்கு அவசியமே இருக்காது!*

*ஆனால், இவ்வாறு ஒருவனின் இருதயம் தூய்மையடைவதற்கு முன்பாக, இந்த "லோக மாயைகளைக்" குறித்து என்னதான் அவனிடம் நீங்கள் பேசிப்பார்த்தாலும், அதனால் யாதொரு பயனும் நிச்சயமாய் ஏற்படாது! அதற்கு மாறாக, அவன்தான் உங்களைத் திரும்பிப் பார்த்து "இதனால் என்ன? இவைகளை நான் அனுபவிப்பதில் அப்படி என்ன தீமை வந்துவிடப்போகிறது!" என்றே சாடிப் பேசுவான். "இல்லையப்பா, இவைகள் உன்னை நாளாவட்டத்தில் அழித்துவிடும்" என வலியுறுத்தி நீங்கள் அவனிடம் பேசிப் பார்த்தாலும், அதினால் பயன் ஏதும் ஏற்படாது!*

*இன்று ஆடவர்கள்கூட தங்கள் மேனியில் அழகு ஆபரணங்களை போடத் துவங்கி விட்டார்கள்! "இது என்ன அலங்கோல அலங்காரம்" என நீங்கள் பேசிப்பாருங்கள்.... அது அவன் செவி மடலில் கூட ஏறாது! ஆனால், அவன் இருதயம் தூய்மை பெற்றுவிட்டால், ஆ.... இது என்ன ஆச்சரியம்.... அவன் உடனே அந்த அலங்காரங்களைக் களைந்து விடுகிறான்: ஆம், இந்த லோகத்துக்குரியவைகளை அணைத்து வாழ்வதில் லாபம் என்ன உண்டு? இருப்பினும், நெஞ்சில் தூய்மை பெறுவதற்கு முன்பாகவோ "இந்த இன்பங்களை அனுபவியாமல் நான் எப்படி வாழ்வேன்! இவைகளை அனுபவிப்பதற்குத்தானே நான் இந்த லோகத்தில் பிறந்திருக்கிறேன்!" என்றே அவன் பேசுவான்!*

*ஆனால், அவர்கள் தேவனை தங்கள் வாழ்வில் ருசித்து அறிந்துகொண்ட பிறகு, "இந்த லோக ஆசாபாசங்களை நீங்கள் களைந்தெறிய வேண்டும்!" என நாம் அவர்களிடம் கூறுவதுகூட அவசியமில்லாமல் போகிறது! தங்கள் ஆத்துமத்திற்குரிய உணர்வை அவர்களே பெற்றுவிடுகிறார்கள்!*

**மனந்திரும்பும் இளைஞர்கள் ஓர் சுத்த இருதயத்தை தங்களில் பெற்றுவிட்டால், எதை உடுத்த வேண்டும்? எதை அணிய வேண்டும்? என்ற சர்ச்சைக்கே இடமில்லாமல், "எவை என் ஆண்டவரின் பணிக்கு பயனுள்ளவைகள்?" என்ற கேள்விக்குரிய விடையின்படியே உடுத்துவார்கள், அணிவார்கள்! அவ்வளவுதான்.**

*ஓர் சுத்த இருதயம் பெறுவதில் அடைந்திடும் மகிழ்ச்சியைக் காட்டிலும், வேறொரு மகிழ்ச்சி இவ்வுலகில் இல்லவே இல்லை! ஆனால், லோக மாயையின் வேறு காரியங்களைத் தேடி இன்று ஜனங்கள் "மெய்யான மகிழ்ச்சியை" இழந்து நிற்கிறார்கள்! இவர்கள் "ஒன்றுமில்லாதவைகளுக்காய்" தவித்து புலம்புகிறார்கள்..... லோக இன்பம் தேடித் தேடி ஒன்றும் பெறாமலே ஓடிக்கொண்டிருக்கிறார்கள். மெய்யான மகிழ்ச்சியும் நன்மையும் தேவனிடத்திலும், அவர் தரும் சுத்த இருதயத்திலும் மாத்திரமே உண்டு! இதைத் தவிர, உங்கள் மனம் விரும்பிய எங்கு வேண்டுமானாலும் அலைந்து, தேடி வாருங்கள்.... உங்களுக்கு ஒன்றும் கிடைக்காது! நீங்கள் அழகு சிங்கப்பூருக்கு போங்கள்.... நாயகாரா நீர் வீழ்ச்சி சென்று கண்ணார ரசித்துப் பாருங்கள்..... பனிமலை காட்சி காண, பல லட்சம் செலவு செய்து அனுபவித்துவாருங்கள்...... எங்கு வேண்டுமானாலும் செல்லுங்கள், என்ன வேண்டுமானாலும் அனுபவித்துப் பாருங்கள், அத்தனையும் நூற்றுக்கு நூறு மாயை, மாயை! உங்களுக்கு கிடைக்கப்போவது ஒன்றும் இல்லை!*

*உங்கள் இருதயம் தூய்மை அடையாவிட்டால், நீங்கள் அணைத்துக்கொண்ட அனைத்தும் வெறுமையே! ஆனால் நீங்களோ தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு, உங்கள் நெஞ்சில் அவர் தங்கி விட்டால், நீங்கள் வறுமையான ஆப்பிரிக்கா செல்லுங்கள், வசதி குறைந்த இந்தியா செல்லுங்கள்.... அவை அனைத்தும் உங்கள் பேரின்பமாய் இருக்கும்!* **ஏனெனில், அதன் ஒரே காரணம், நீங்கள் போகும் இடமெல்லாம் தேவன் உங்களோடு இருக்கிறார்!** *இதற்கு மாறாக, உங்கள் இருதயம் தூய்மையற்றதாய் இருந்தால்.... நீங்கள் அமெரிக்கா என்ன.... பரலோகமே சென்று பார்த்தாலும் உங்களுக்கு மகிழ்ச்சி இருக்கவே இருக்காது!*

*- சார்லஸ் G. பின்னி*

---

## சுவிசேஷம் அறிவித்திடும் 'பரவசத்தை' இழப்பது தவறு!

*இரட்சிக்கப்பட்ட நன்றி உள்ளம் வேண்டும்*

*அப்போஸ்தலனாகிய பவுல், சுவிசேஷ ஊழியத்தின் மீது பெற்றிருந்த ஜெயத்தைக் குறித்து ஓர் இரகசியம் உள்ளது! அது என்னவெனில்:* **"சுவிசேஷ பிரசங்கங்களில் அவர் கொண்டிருந்த பரவசத்தை" ஒருபோதும் இழக்கவில்லை.** *அவ்வித பரவச தொனியே, அவருடைய நிருபங்களின் பல இடங்களில் காண்கிறோம். அதற்கு உதாரணமாய் 1தீமோ.1:11-18 வசனங்களை கவனித்துப் பாருங்கள்:*

*1) அவர் தம்முடைய செய்தியை "தேவனுடைய மகிமையான சுவிசேஷம்!" என அழைத்தார் (வச.11).*

*2) "தேவனுடைய கிருபையை, அவர் கொண்டாடி, அது அவரிடத்தில் பரிபூரணமாய் பெருகிற்று!" எனக் கூறி மகிழ்ந்தார் (வச.14).*

*3) மேலும், கர்த்தர் அருளிய அந்த கிருபையில் "விசுவாசமும் அன்பும்" நிறைத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறினார்! (வச.14).*

*4) "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார்" என்ற சுவிசேஷம், உண்மையுள்ளது என்றும், எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுள்ளது என பூரிப்புடன் கூறினார்(வச.15).*

*5) தான், சுவிசேஷத்தின் சம்பூரணத்தை காண்பதற்கு முன்பாக "நான் தூஷிக்கிறவனாயும், துன்பப்படுத்துகிறவனாயும், கொடுமை செய்கிறவனாயும் இருந்தேன்" எனக்கூறி, பாவிகளில் நான் பிரதான பாவி என பணிவுடன் அறிவித்தார் (வச.16). நாம் காரிருளில் இழந்து போனதை எவ்வளவு நினைவு கூருகிறோமோ, அந்த அளவிற்கே சுவிசேஷத்தின் 'ஜீவ சுவாசத்தை' விளங்கிக்கொள்ள முடியும்!*

*மேலும், இனிவரும் கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு "தன்னையே திருஷ்டாந்தமாய்" முன்வைத்தார் (வச.16). அதாவது, "பிரதான பாவியாகிய நானே இரட்சிக்கப்பட்டிருந்தால், இந்த உலகில் உள்ள எவ்வித கொடிய பாவியும் இரட்சிக்கப்பட முடியும்!" என்பதே அவர் முன்வைத்த திருஷ்டாந்தம். இவைகளை கூறிவிட்டு, உச்சக்கட்டமாய் கர்த்தரைப் போற்றி புகழ்ந்தார்: "நித்தியமும், அழிவில்லாமையும், அதரிசனமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாய் இருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதா காலங்களிலும் உண்டாயிருப்பதாக ஆமென்" எனக் கூறினார்.*

**பொதுவாய் ஓர் நிருபத்தின் முடிவில் கர்த்தரை வாழ்த்தும் வசனங்கள் இருப்பதுண்டு. ஆனால் இங்கு, ஆரம்ப முதல் அதிகாரத்திலேயே 'இயேசுவின் சுவிசேஷத்திற்காக' கர்த்தரைப் போற்றி ஆராதனை செய்த பரவசத்தைக் காண்கிறோம்!**

*தேவனுடைய கிருபையான சுவிசேஷத்தின் மூலமாய் நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக வாழ்ந்த இழிநிலையை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது! முழு வேதாகமத்தையும் நேசிக்கும் வேதப்பிரியன் நான். ஆகிலும் சில வசனங்கள் என் உள்ளத்தை கொள்ளை கொண்டதாயிருக்கிறது. அப்படியொரு வசனம் தான் சங்கீதம் 136:23* **"தம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரைத் துதியுங்கள், அவர் கிருபை என்றுமுள்ளது!"** *எப்போதெல்லாம் இந்த வசனத்தை வாசிக்கிறேனோ, அப்பொதெல்லாம் என் கண்கள் கண்ணீரால் நிறைந்துவிடும்! என்னைவிட மேலான, என்னைவிட பரிசுத்தமுள்ள, என்னைவிட கண்ணியமான மக்கள் அநேகர் இருந்தும், தேவன் என்னை இரட்சித்து, அவருடைய சொந்த பிள்ளையாய் மாற்றிய சம்பவம் என்னால் விளங்கிக்கொள்ள முடியவில்லை! விலையேறப் பெற்ற தைலத்தை இயேசுவின் பாதத்தில் ஊற்றிய மரியாளை இயேசு சுட்டிக்காட்டி "சீமோனே, அவளுடைய அதிகமான பாவங்கள் மன்னிக்கப்பட்டபடியால் அவள் என்னை அதிகமாய் அன்புகூருகிறாள், கொஞ்சமாய் பாவம் மன்னிக்கப்பட்டவன், என்னை கொஞ்சமாகவே அன்புகூருவான்" என கூறினார் (லூக்கா 7:47). இந்த வசனத்தின் மேன்மையான பொருள் என்னவென்றால், "மற்ற யாரைக்காட்டிலும் அதிக பாவம் நிறைந்தவள்!" என்ற பொருளாகாது. அதற்கு மாறாக "மற்ற யாரைக்காட்டிலும் தன் பாவ நிர்ப்பந்த நிலையை உணர்ந்திருந்தாள்" என்ற உண்மையே ஆகும் (லூக்கா 7:47).*

**சுவிசேஷத்தின் இந்த பேரின்ப மையத்தை ஒருவன் இழப்பது** *அவனுடைய எதிர்கால வாழ்வின் 'நற்செய்தி இனிமையை'*

சூனியமாக்கிவிடும் என்பதை நாம் அறிந்து, சுவிசேஷத்தை அறிவிப்பதில் உண்டாகும் பேரானந்த மகிழ்ச்சியை இழக்காதிருப்போமாக!

- R.ஸ்டான்லி BYM

---

## 'அழைக்கப்பட்ட ஊழியனின்' பாக்கியம்!

*முழுமையும் தந்துவிட்ட ஊழியனை கர்த்தர் காத்திடுவார்*

*படகு நிறைய மீனோடு 'விட்டுவிட்டு வந்த' பேதுரு! மீன் வலையோடு படகையும், தன் தகப்பனையும் 'விட்டுவிட்டு வந்த' யோவான், யாக்கோபு! தன் 'கலெக்டர்' வேலையை 'விட்டுவிட்டு வந்த' மத்தேயு! இவ்வாறு, தன்னை அழைத்தவருக்கு 'கையிலிருந்த' அனைத்தையும் கொடுத்துவிட்டு, தன்னை அழைத்த 'எஜமானை' பின்பற்றி சேவித்திடும்* **முழுநேர ஊழியர்கள்** *பாக்கியவான்கள்!*

*இந்நிலையில், யோவான், தன் எஜமானனாகிய இயேசுவைப் பார்த்து "போதகரே, நீங்கள் எங்களை அழைத்து, எல்லாவற்றையும் விட்டு உங்களைப் பின்பற்றி ஊழியம் செய்வதுபோல் இல்லாமல், உமது நாமத்தை (அதிகாரத்தைப்) பயன்படுத்தி சிலர் ஊழியம் செய்கிறார்கள், அவனைத் தடுத்தோம்" என கூறினான் (மாற்கு 9:38). அதற்கு இயேசு "அவனைத் தடுக்க வேண்டாம்.... என் நாமத்தை பயன்படுத்தி ஊழியம் செய்தால், செய்யட்டும்...." என பதில் கூறினார்! (வச.39). இன்று உலகில் பற்பல ஊழியங்கள் நடப்பதற்கு இயேசு கூறிய பதிலே காரணமாகும்!*

ஆகிலும், ஒரே ஒரு வித்தியாசத்தை அவர் குறிப்பிட்டார்! "(அழைக்கப்பட்ட) நீங்கள் கிறிஸ்துவினுடையவர்கள்" (வச.41). அதாவது "எஜமானுக்கு சொந்தமான அவரது ஊழியர்கள்" எனக்கூறி, அவர்களின் பாக்கியத்தை குறிப்பிட்டார்:

*1) உங்களுக்கு "ஒரு கலசம் தண்ணீர் குடிக்க கொடுக்கிறவன்" எவனோ, அவனுக்கு நான் அதற்குரிய பலனைத் தருவேன்!" என்றார். அதாவது, தன் சொந்த ஊழியனின்* **'தண்ணீர் தாகத்தையும்'** *கர்த்தர் அறிந்து வைத்து, பூர்த்தி செய்வார்! என்பதேயாகும் (வச.41).*

*2) எல்லாவற்றையும் விட்டுவிட்டு, அழைத்தவரை மாத்திரமே விசுவாசித்து வாழும் நீங்கள், இவ்வுலகில் "சிறியர்கள்!" சிறியராகிய உங்களுக்கு தீங்கு செய்பவர்களை,* **நானே விசாரித்து** *பதில் செய்வேன்! (வச.42).*

*ஆம், அழைக்கப்பட்ட 'முழு நேர ஊழியன்' இத்தனை பாக்கியம் பெற்றவன்! ஆமென்.*

- T.ரத்தினகுமார்

'இளமையை அர்ப்பணித்து'
கர்த்தருக்காய் பிரகாசித்தவர்!

# இசபெல் கூன்



கனடா தேசத்தின் வின்கூவர் பட்டணத்தில், பக்தி நிறைந்த குடும்பத்தில் பிறந்தவர் இசபெல் கூன் சகோதரி! தன் கல்லூரி காலங்களில் நடந்த ஓர் கூட்டத்தில், இசபெல் அறிக்கை செய்த 'இரட்சகரின் விசுவாசம்' வெகுவாய் பரிகசிக்கப்பட்டதினிமித்தம் மனம் உடைந்தார்கள்! ஏன், தற்கொலைகூட செய்து கொண்டால் என்ன? எனவும் சிந்திக்கத் துவங்கினாள். அவருடைய நிலையறிந்து, அவரின் பக்தியான தகப்பன் மிகுந்த பாரத்தோடு இசபெலுக்காக ஜெபித்தார்! அவ்வேளையில் தகப்பனார் தன்மீது கொண்டிருக்கும் அளவுகடந்த அன்பைப் பற்றி நினைத்துப் பார்க்கும்படி அவள் தூண்டப்பட்டாள். அந்த இரவின் இருளின் தனிமையில் பரலோகத்தை நோக்கித் தன் கைகளை உயர்த்தினாள்! நீண்ட காலத்துக்குப் பின்னர் தனக்குச் சமாதானமான உறக்கம் கிடைத்திருக்கிறது என்பதை அவள் நினைத்துப் பார்த்தாள்! இது, தேவனுடைய கிரியை என்பதை உணர்ந்தாள்.

ஜேம்ஸ் பிரேசர் சகோதரர் சீனாவில் லிசு பழங்குடிகளிடையே அவர் அருட்பணி ஊழியம் செய்துவந்தார். தனது அருட்பணி அனுபவங்களைப் பற்றி அவர் விவரிக்க விவரிக்க, இசபெல்லின் இருதயத்தில் ஆர்வம் அதிகமாகிக் கொண்டே வந்தது! "கர்த்தரின் அழைப்பை" தன் ஆர்வமிகு இருதயத்தில் பெற்று, அதை ஏற்றுக் கொண்டார்!

1928-ம் ஆண்டு சீன தேசத்திற்குப் புறப்பட்டார் இசபெல். கடினமான மொழிப் பிரச்சனை காணப்பட்டாலும் கனிவுடன் மக்களை நேசித்து அவர்களோடு, அன்புடன் பழகினார். சீனாவில் ஜாண் கூன் பெயர்கொண்ட சிறந்த கிறிஸ்தவ விசுவாச வாலிபனை மணந்தார்!

லிசு மக்கள் மத்தியில், அவரின் பணி அளவிட முடியாத அளவு பெருகியது. கணவர் ஜாணின் உற்சாகம் இன்னும் உத்வேகத்தையும், உறுதியையும் தந்தது. தன் மகளையும் மிஷனெரிப் பணிக்கு அர்ப்பணித்தார் இசபெல்!

நற்செய்தி பணிக்கு நடுவே ஏற்பட்ட போர் பிரச்சனைகள் மத்தியிலும், அயராது அரும்பணியாற்றினார் இசபெல். தன் அந்திய காலத்தில், பெலஹீனமடைந்த இசபெல் 'புற்றுநோயால்' தாக்கப்பட்டு, கனடா திரும்பி, தன் ஊழிய அனுபவங்களை ஒரு நூலாக எழுதி முடித்து.... நிறைவுடன், கர்த்தருடைய மகிமைக்குள் பிரவேசித்தார்!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## வாசல் அடைபடுமுன் "நித்திய வீடு செல்ல" ஆயத்தமாகுங்கள்!

பித்தோர்கார்ட் என்ற இடத்திலிருக்கும் டார்ச்சுலா என்ற கிராமத்து அருகில், காலி என்ற ஒரு பெரிய நதி, பேரிரைச்சல் போட்டுக்கொண்டு கருமையான நிறத்தில் இந்த இடத்தில் ஓடுகின்றது. நேப்பாளத்தையும், நமது இந்திய தேசத்தையும் இந்த காலி நதி பிரிக்கின்றது. நதிக்கு அப்பால் நேப்பாளமும், இந்தப் பக்கத்தில் இந்தியாவும் உள்ளது.

இந்த நதியின் குறுக்காக ஒரு பெரிய தொங்கு பாலம் அமைக்கப்பட்டுள்ளது. இரண்டு தேச மக்களும் பகற்காலங்களில் அங்குமிங்குமாக இந்த தொங்கு பாலத்தின் வழியாக சர்வ சாதாரணமாக, போய் வந்து கொண்டிருப்பார்கள்! ஆனால் மாலை 5:45 மணி ஆனதும், இந்திய மற்றும் நேப்பாள எல்லைகளிலுள்ள கதவுகள், ஒரே நேரத்தில் அடைக்கப்பட்டுவிடும்! அந்தக் காட்சியைக் காணவே, நாங்கள் ஒரு நாள் அந்தப் பாலத்தின் அருகில் போய் நின்றோம்!

அதிலும், அன்பின் ஆண்டவர், நான் ஒரு ஆவிக்குரிய பாடத்தைக் கற்றுக்கொள்ளவும், அதை மற்றவர்களுக்கு எச்சரிப்பின் செய்தியாய் கூறும்படிக்கும், இந்த ஒரு நல்ல சம்பவத்தைத் தந்தார். ஆம், திறவுண்ட வாசல் அடைபடுமுன்னர் நாம் நமது நித்திய வீட்டுக்கான காரியங்களை ஒழுங்குசெய்து நம்மை நன்கு ஆயத்த நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும்!

நேப்பாள பாலத்தின் வாசல்காவலன், சரியாக மாலை 5:45 மணிக்கு வந்துவிட்டான்! அடைத்துவிட்டு, பின்பு அவன் திரும்பிப் பார்க்காமலே சென்றுவிட்டான்! மக்களும் அவ்வாறே, ஆயத்தமாய் தங்கள் பணியை முடித்து, பாலத்தை விட்டு வெளியே வந்துவிட்டார்கள்!

இன்னமும் கர்த்தர் வரும் காலம் வரவில்லையென, பாவத்திலும் உலக இன்பத்திலும் மயங்கி நிற்கும் வாலிபனே, வாசல் அடைபடும் காலம் நெருங்கிவிட்டது என அறிந்து, உடனே மனந்திரும்பி, உன்னை நித்திய வீட்டிற்குள் அழைத்துச் செல்லும் ஜீவ வழி பிரவேசிப்பாயாக!

- சுவிசேஷ மலர்

பணம் அனுப்ப QR பயன்படுத்தவும்

maduraichristianfellowship@indianbk

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**